சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – சுயநிதி கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர் / மாணவியர்களுக்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத கல்வி கட்டணங்கள் வழங்குதல் - கூடுதல் ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-3) துறை

அரசாணை (நிலை) எண்.72

நாள் : 15.10.2021
பிலவ வருடம்
புரட்டாசி, 29 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந-3)நலத்துறை, நாள் 09.01.2012.
2. அரசாணை (நிலை) எண்.51, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந-3)நலத்துறை, நாள் 11.08.2017
3. அரசாணை (நிலை) எண்.52, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந-3)நலத்துறை, நாள் 11.08.2017.
4. செயலர், கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளின் கூட்டமைப்பு, கோயம்புத்தூர் கடிதம் நாள் 02.08.2021.

----------

ஆணை :-

மேலே பார்வை 1-இல் படிக்கப்பட்ட அரசாணையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக் குழு நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் ஒன்றிய அரசின் உதவித் தொகை திட்டத்தின் கீழ் 2011-2012-ஆம் கல்வியாண்டில் இருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2 மற்றும் 3-இல் படிக்கப்பட்ட அரசாணைகளில் "சுயநிதி கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் சேரும் தகுதியுடைய ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து பயிலும் தகுதியுடைய மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி கட்டண தொகைக்கு மிகாமல்" வழங்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

3. பார்வை 4-இல் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளின் கூட்டமைப்பு, ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி நிருவாக ஒதுக்கீட்டின் (Management Quota) மூலம் அனுமதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணாக்கர்களுக்கு திருப்பி செலுத்தப்படாத கல்வி உதவித்தொகை முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் நிருவாக ஒதுக்கீட்டுக்கான கல்வி கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கட்டணத்தை வழங்குமாறும் கோரியுள்ளது.

4. இந்நிலையில், கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளின் கூட்டமைப்பு அளித்த கடிதத்தினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(அ) மாணாக்கர்கள், தாங்கள் விரும்பும் கல்லூரிகளில் தங்களுக்கு விருப்பமான பாடப்பிரிவுகளில் சேர்ந்து பயில அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) அவ்வாறு, சுயநிதி கல்லூரிகளில் சேர்ந்துள்ள மாணாக்கர்கள் விரும்பும் பாடப்பிரிவுகளில், கலந்தாய்வு (counseling) மூலம் அனைத்து விதமான அரசு ஒதுக்கீடுகளுக்கான (65 சதவிகிதம்) இடங்கள் நிரப்பப்படவில்லையெனில், அந்நிரப்பப்படாத இடங்களில், மேற்படி சேர்க்கப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களை அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு (Government Quota) மாற்றம் செய்து, அதன் அடிப்படையில் மாணாக்கர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். அதிகமாக வசூலிக்கப்பட்ட கட்டணம் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.

(இ) மாணாக்கர்கள் கோரும் பாடப்பிரிவுகள் அவர்கள் விரும்பிய சுயநிதிக் கல்லூரிகளில் அனைத்து அரசு ஒதுக்கீட்டு (Government Quota) இடங்களும் நிரப்பப்பட்டிருப்பின், நிருவாக ஒதுக்கீட்டில் (Management Quota) சேர்க்கப்பட்ட மாணாக்கர்களுக்கான அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கட்டணம் வழங்கப்படவேண்டும்.

5. மேற்கண்ட ஆணை 2021-2022-ஆம் கல்வியாண்டு முதல் சேர்க்கப்படும் புதிய மாணாக்கர்களுக்கு மட்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஏற்கனவே கல்வி உதவித் தொகை பெற்று வரும் மாணாக்கர்களுக்கு இவ்வாணை பொருந்தாது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.41996/நிதி(ஆதிந)த்துறை, நாள் 13.10.2021 – இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
அரசு முதன்மைச் செயலர், உயர்கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600 009.
தொழில் நுட்ப இயக்குநர், தேசிய தகவலியல் மையம், சென்னை-90
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகர்கள்
மாநில கணக்காயர், சென்னை- 600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 001/5
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்

**நகல்**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை 600 009
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
நிதித் (ஆ.தி (ம) ப.ந. / வ.செ.பொ.-1/2/வ.வ.1) துறை, சென்னை-600 009.
ஆதி(ம) பந(அநமு-1) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

15/10/2021
பிரிவு அலுவலர்